## இந்திய தவ்ஹீத் ஜமா அத் தலைவர்

# எஸ்.எம். பாக்கர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை,ஜூன்.21-

இந்திய தவ்ஹீத் ஜமா அத் தலைவர் எஸ்.எம். பாக்கர் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

இந்திய தவ்ஹீத் ஜமாஅத் தலைவர் எஸ்.எம்.பாக்கர் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமடைந்தேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், அமைப்பினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு கால்நடை

### பல்கலையில் விண்ணப்ப தேதி நீட்டிப்பு!

சென்னை: ஜூன்.21-

தமிழ்நாடு கால்நடை பல்கலை.யில் இணையதளம் மூலம் விண்ண ப்பிப்பதற்கான தேதி நீட்டிக்கப்பட்டுள்ளது.

B.Tech படிப்புகளுக்கான விண்ணப்ப தேதியை ஜூன் 28 வரை பல்கலைக்கழக நிர்வாகம் நீட்டித்துள்ளது. அயல்நாடு வாழ் இந்தியர்கள் உள்ளிட்டோர் ஜூலை 5 வரை விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.



குன்றத்தூர் நகரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, அரசின் சாதனை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், தா.மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., படப்பை ஆ.மனோகரன், பட்டூர் ஜபருல்லா, சைதை சாதிக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# வள்ளுவர் கோட்டம் புனரமைப்புப் பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

சென்னை,ஜூன்.21-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைப்படி 2023-2024 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்,

"உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவர் புகழினை உலகெங்கிலும் கொண்டு செல்ல வள்ளுவர் கோட்டம் 1976ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. கலையழகும், கம்பீரமும் கொண்டு சென்னையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் புனரமைப்புப் பணிகள் சுமார் ரூ.80 கோடி மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த அளவில் மேற்கொள்ளப்படும்"

என அறிவித்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வள்ளுவர் கோட்டம், வடிவமைக்கப்பட்டு 18.9.1974 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டபின் 15.4.1976 அன்று திறந்து வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வடிவமைக்கப்பட்டு உலக மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் கலை நுணுக்கத்தோடு ஆசியாவிலேயே மிகப்பெரிய தாக, நடுவில் தூணே இல்லாத அரங்கத்துடன், திருவாரூர் தேரையே சென்னை மாநகருக்குக் கொண்டு வந்ததுபோல் சிற்பத்தேர் உருவாக்கப்பட்டு அதனை வள்ளுவர் கோட்டத்தின் மணிமுடியாய் நிர்மாணித்துக் காண்போரைக் கவரும் வண்ணம் கட்டப்பட்டுள்ளது.

அய்யன் திருவள்ளுவரின் புகழ்போற்றும் இந்த மாபெரும் கலைச் சின்னமாகிய வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அ ர ங் க த் தை யு ம் , பூங்காவையும், பராமரிக்கவும், தேர், கோபுரம், கலசம், திருவள்ளுவர் சிலை

ஆகியவைகளின் நிழல் உருவம் தெரியும் வண்ணம் அமையப் பெற்றிருக்கும் நீர் நிலைகளைப் பராமரிக்கவும், கோட்டம் ஒளிமிக்கதாக என்றென்றும் திகழவும், பார்வையாளர்கள் அமர்ந்து கண்டுகளிக்கவும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைப் பல மடங்கு உயர்த்தவும் வள்ளுவர் கோட்டத்தினைக் காலச் சூழலுக்கு ஏற்றவாறும், மேம்பட்ட தொழில்நுட்ப வசதிகளுடனும் கலையம்சம் மாறாமல் புனரமைத்திடவும் 80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 13.7.2023 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அந்த அரசாணைப்படி அய்யன் வள்ளுவர் கோட்டத்தில் புனரமைப்புப் பணிகள், புதிய கட்டுமானப் பணிகள், கூடுதல் பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்துதல் ஆகியவற்றுடன் நடைபெற்றுவரும் புனரமைப்புப் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜெயகர் முன்னிலையில் ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுரைகள் வழங்கினார்கள். இந்த ஆய்வின்போது செய்தித்துறை கூடுதல் இயக்குநர் எஸ்.செல்வராஜ், இணை இயக்குநர் கு.தமிழ்செல்வராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## பாலாலட்சுமணன் தலைமை! தா.இளைய அருணா - வ.பெ.சுரேஷ் முன்னிலை!

# இராயபுரம் 53-வது வட்டத்தில் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள்!

## இ.பரந்தமான் எம்.எல்.ஏ. சிறப்புரை! ஆர் .டி.சேகர் - ஐட்ரீம் ஆர். மூர்த்தி பங்கேற்பு!

சென்னை, ஜூன் 21

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 53-வது வட்டம் சார்பில் முத்தமிழ் அறிஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி ராயபுரம் மேற்குப் பகுதி 53வது வட்டம் ஸ்டாலினி நகர் சி.பி.ரோடு சந்திப்பில் இன்று (21.6.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகளை கழக வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. நலத்திட்டம் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

தா. இளைய அருணா, வா.பெ.சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், சட்டமன்ற உறுப்பினர் ஐ.டி.மூர்த்தி பங்கேற்கின்றனர்.

இ.மதன், எ.அன்வர், ஜெ.குணாளன், பி.ரூபாவதி, கே.தன்ராஜ், எ.சாந்தகுமார், எஸ்.அசோக், மு.ஜானகிராமன், தீ.சரவணமூர்த்தி, எம். லோகநாதன், மெய்யழகன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் பி.டி.பாண்டி செல்வம், நா.மனோகரன், மு.கோபி, நா.சண்முகம், இரா.க ரு ண ா நி தி , பா.வேளாங்கண்ணி, கீதா சுரேஷ், க.கோவிந்தசாமி லியோ, டி.சுரேஷ், லயன் தீன த யா ள ன் , பா.சோமசுந்தரமூர்த்தி, எம். கே.இஸ்மாயில்,

சு.திருஞானம், கு.ரமேஷ், வி.மலை யம்மாள் பங்கேற்கின்றனர்.

மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், அணிகளில் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், கழகத் தொண்டர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றியுரை: எம்.கிருஷ்ணன், எஸ்.ரமேஷ், எஸ்.சங்கர்.

## எம்.விமலாமோகன் தலைமை! ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. முன்னிலை!

# சென்னை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி சார்பில் 500 பேருக்கு நல உதவிகள்!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.- கலாநிதி வீராசாமி எம்.பி. வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 21

சென்னை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாளை முன்னிட்டு 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி 23.06.2024, ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 5.00 மணியளவில் வினோபா நகர் வியாபாரிகள் சங்க திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் எம்.விமலா மோகன் தலைமை வகிக்கிறார்.

ஏ . இ ந் தி ர ா , கே.அக்தரிபேகம், பாம்பே இ.லட்சுமி, எம்.பூங்கோதை, ஆர்.சோலையம்மாள், எம். கௌதமி ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், மாஸ்.டி.வெங்கடேசன், பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், நேதாஜி யூ.கணேசன், எஸ்.எல்.சுந்தர், எஸ்.எம்.அப்துல் ரஹ்மான், ஏ.முருகேசன், மு.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.ஸ்ரீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்கள்.

இதில் கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, கழக மகளிர் அணி இணைச் செயலாளர் குமாரி விஜயகுமார், பகுதிச் செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், ஆர். செந்தில்குமார், க.ஜெயராமன், முருகன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பலர் பங்கேற்கின்றனர்.

## எஸ்.ஆஸ்டின் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ. திறந்து வைத்தனர்!

# அண்ணா அறிவாலயம் தொண்டரணி கே.நித்தியானந்தத்தின் தந்தை குமார் படத்திறப்பு!

## அன்பகம் கலை - டி.கே.எஸ்.இளங்கோவன் - ப.தாயகம்கவி பங்கேற்பு!

சென்னை, ஜூன் 21 -

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்குப் பகுதி 125வது வட்டம் - பகுதிப் பிரதிநிதி - அண்ணா அறிவாலயம் தொண்டரணி கே. நித்தியானந்தத்தின் தந்தை சி.டி.கே.குமார் அவர்களின் 16 ஆம் நாள் நினைவு அஞ்சலி மற்றும் படத் திறப்பு நிகழ்ச்சி (18.06.2024 - செவ்வாய்) மாலை 7 மணியளவில் மயிலாப்பூர் எண்.7, ஏகாம்பரம் தெரு, டாக்டர் அம்பேத்கர் பாலம் அருகில் நடைபெற்றது.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., 125வது வட்டச் செய லா ளர் அ.தவநேசன், அ.ரேவதி எம்.சி., தி.விக்னேஸ்வரன், ம. ஜெயகோபி, வி. திலீப்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அன்னாரது படத்தை கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தாயகம் கவி எம்.எல்.ஏ., மாஸ்டர் பெ. சேகர், ஜி.சுகுமாரன், ஜெ. பச்சையப்பன், மு.தம்பிதுரை, சி.தசரதன், மந்தைவெளி அ. பாபு, வேலுசம்மந்தம், யோகேஷ்ரவி, செல்வி.சௌந்தரராஜன், வி.என்.ராஜன், பொன். தனபால்,

எஸ்.முனுசாமி, பி.எல். தாஸ், ஏ.குமார், எல்.உதயகுமார், வி.வெற்றி வேல், ஏ.தாஸ், மா.பா.அன்பு, கோ. கண்ணன், துரை பார்த்திபன், பா.பொன்னு சாமி,

ராமலிங்கம், அரிராஜன், மெய்யப்பன், செல்வராஜ், செல்வம், தமிழ்கரிகாலன், பன்னீர்செ ல்வம், சிமன்சேகர், ராமலிங்கம், துரைகண்ணு, செழியன், நாகேந்திரன், மூர்த்தி, துரை, மித்திரன், பாரதி, அஜீத், மணிகண்டன், சத்யநாராயணன், மாறன், செல்வம், ஜனா, திருமயிலை வெங்கடேசன், காத்திகேயன், பாபு, அம்பேத், முருகன், தமிழ் வாணன், நிர்மல், குமரேசன், கோகுல், சூர்யா, தினேஷ், ரஞ்சித், சுகுமார், சூர்யா, தீபக், ஆனந்த், கோமத், மணிகண்டன், தீபன், பிரவின்குமார், இனியன்சம்பத், கன்னியப்பன், பாபு, மோகன், பாஸ்கர், சந்திரன், ராஜா, வேலு, ரவி, ரீகன், பாரத், சரவணன், ஏழுமலை, தனபால், ஏழுமலை, வேலு, புதியவன், கேஸ்மூர்த்தி, கார்த்திக், அசோக், விஜி, சதீஸ் குமார், விஜய குமார், செல்வமணி, திவாகர், ரவி, விநாயகம்,

125வது வட்டக் கழக நிர்வாகிகள்: ரா.அழ கேந்திரன், சி.இ. மதிவாணன், பட்டு ப.பிரகாஷ், கு.தர்மேந்திரா, சோ. பத்ம நாபன், ஐ. க ர் ண ன் , எ ஸ் . தெ ன் ன ர சு , பு.ஞானசேகர், பா. ரமேஷ்,ஜெ.சசி,எம். ஜெய்கர், ஏ.பி. வேளாங்க ண்ணி, ஏ. அப்துல்ஹமீதி என்கிற ஜின்னா,து.நரேந்தி ரன், சி.டி. நரசிம்மன் உள்ளிட்டோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

## எஸ்.மதன்மோகன் வரவேற்புரை! அ.தமீம் அன்சாரி தலைமை!

# சேப்பாக்கம் 114 அ வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டம்!

## தூத்துக்குடி சரத்பாலா சிறப்புரை! தயாநிதிமாறன் எம்.பி. - மு.க.தமிழரசு- நே.சிற்றரசு பங்கேற்பு!

சென்னை, ஜூன் 21 -

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி 114 அ வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் மூன்றாண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (21.6.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு சி.என்.கே. சாலை சேப்பாக்கத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்தில் பகுதிச் செயலாளர் 9-வது மண்டலக் குழுத் தலைவருமான எஸ்.மதன்மோகன் வரவேற்றுப் பேசுகிறார். வட்டச் செயலாளர் அ.தமீம் அன்சாரி தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் தயாநிதிமாறன் எம்.பி. - மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தலைமைக் கழகப் பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா ஆ கி யோ ர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் சி.கே.ரங்கராஜன், ஆர்.ஏ.அன்பழகன், எஸ்.எஸ். கண்ணன், கே.சந்திரன், ஆர்.பாஸ்கர், அருண் (எ) அரவிந்த், சி.செல்வமணி, டி.ஜி. சிவா, எம்.செல்வம், எஸ். விஜயன், எம்.வெங்கடேசன், ஆர்.எஸ்.சந்திரகுமார், கே.சக்திவேல், வி. பி.காளிஸ்வரன், பா.ராஜ்குமார், எஸ்.எஸ். ராமச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பி.எஸ்.மணி, கே.சியாமலா, எம்.ஆர்.சிவக்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்தணி நகரம் மா.பொ.சி சாலையில் மழைநீர் தேங்கி உள்ளதால் தகவல் அறிந்த திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ நெடுஞ்சாலைத் துறையின் மூலம் கால்வாய் அமைத்து மழை நீரை உடனடியாக வெளியேற்ற நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுக்கு ஆலோசனை தெரிவித்து அதற்கான பணிகளை பார்வையிட்டார். அரசு அதிகாரிகள் நகர மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## ஒன்றிய அமைச்சர் வீடு முற்றுகை!

# 'நீட்' தேர்வை ரத்து செய்யக்கோரி போராட்டம்!

## ரூபாய் நோட்டுகளை வீசி காங்கிரசார் கண்டன முழக்கம்!

டெல்லி, ஜூன் 21-

நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி காங்கிரஸ் சார்பில் போராட்டம் நடைபெற்றது. ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிர தான் வீடு முற்றுகையிடப் பட்டு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ரூபாய் நோட்டுகளை வீசியெறிந்து கண்டன முழக்கங்களை காங்கிரசார் எழுப்பினர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பணம் பெற்றுக் கொண்டு நீட் முறைகேடுகள் அரங் கேற்றப்பட்டதை கண்டித்து டெ ல் லி யி ல் ஒன்றிய கல்வி அ மை ச் ச ர் த ர் மே ந் தி ர பிரதான் வீடு முன்பு பணத்தை வீசியெ றிந்து மாணவர் காங்கிர ஸ ா ர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பணத்தை பெற்றுக் கொண்டு நீட் கேள்வித்தாளை கசியவிட்டது, பணம் பெற்றுக் கொண்டு ஆள்மாறாட்டம் செய்து நீட் தேர்வை எழுதியது என நீட் தேர்வில் ஏராள மான மு றை கே டு க ள் அரங்கேற்றப்பட்டன. இதற்கு பல்வேறு தரப்பின ரும் கடும் கண்டனம் தெரி வித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், டெல்லி ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் வீட்டை முற்றுகையிட்டு மாணவர் காங்கிரஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தேசிய தேர்வு முகமையைக் கலைக்கவும், நீட் தேர்வை ரத்து செய்ய வும் அப்போது வலியுறுத்தி னர். மேலும், பணத்தை பெற்றுக் கொண்டு கல்வித் துறையில் முறைகேடு செய்யும் ஒன்றிய அரசை கண்டிக்கும் வகையில், பணத்தை வீசியெறிந்து முழக்கங்களை எழுப்பினர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் காங்கிரஸாரை காவல்துறையினர் கைது செய்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.


## பெருநகர சென்னை மாநகராட்சி
## பேருந்து சாலைகள் துறை

கோப்பு எண் : பே.சா.து.ந.க.எண்.பி4/1200/2024

### ஒப்பந்தப்புள்ளி ரத்து அறிவிப்பு

**முரசொலி நாளிதழில் - 14.06.2024 மற்றும் Deccan Chronicle - 14.06.2024 அன்று வெளியிடப்பட்ட கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளி நிர்வாக நலன் கருதி ரத்து செய்யப்படுகிறது.**

| வ.எண் | கோப்பு எண் மற்றும் பணியின் விவரம் | பணியின் தோராய மதிப்பு (ரூ) இலட்சம் |
|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - 3 (மாதவரம்) கனரக மற்றும் இலகுரக வாகன நிறுத்த முனையம், சாலைகள், நிர்வாக மற்றும் பல்நோக்கு கட்டிடங்கள் மேம்படுத்தும் பணிக்கு (சிப்பம் 1 முதல் 11 வரை | குறைந்தபட்சம் ரூ.2.89 கோடி அதிகபட்சம் ரூ.3.43 கோடி |

மேலே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு 18.07.24 தேதியில் கோரப்பட்ட திறந்த வெளி மின்னணு ஒப்பம் நிர்வாக நலன் கருதி ரத்து செய்யப்படுகிறது.

செ.ம.தொ.இ / 2031 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**


## சேப்பாக்கம் பகுதி அனைத்து வட்டங்களிலும்

# தயாநிதி மாறன் எம்.பி. நன்றி தெரிவிக்கிறார்!

## பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் எம்.சி. அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதியில் அனைத்து வட்டங்களிலும் ஜீன் 22 சனிக்கிழமை மாலை 4 மணி முதல் கீழ்காணும் அட்டவணைப்படி மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி வீதி வீதியாக சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார். இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. கலந்து கொள்கிறார். இந்நிகழ்விற்கு சேப்பாக்கம் பகுதி அனைத்து நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்குமாறு பகுதி செயலாளரும் 9வது மண்டல குழு தலைவர் எஸ்.மதன்மோகன் எம்.சி. கேட்டுக் கொண்டுள்ளார்.

**62வது வட்டம்:** அய்யா முதலி தெரு, பஜார் தெரு, ரெக்ஸ் தெரு, பாலகிருஷ்ணன் தெரு, வேதகிரி தெரு, கலவை தெரு, மார்கபதி தெரு, அக்ரஹாரம் தெரு, ஐய்யா தெரு, பழனி ஆண்டவர் தெரு, சிங்கண்ணத் தெரு.

**62 (அ) வட்டம்:** கிங்கன்ன தெரு, குருவப்பா தெரு, கிருஷ்ணப்ப தெரு, ராஜகோபால் தெரு, குருவப்பா தெரு, சாமி நாயக்கன் தெரு, அருணாச்சலஅ தெரு, கலவை தெரு, நாகமணி தெரு, நைனியப்பன் தெரு, ஐய்யா தெரு, கங்குவார் தெரு, சிங்கண்ண தெரு.

**63வது வட்டம்:** கரீம் மொய்தீன் தெரு, ஆதித்தனார் சாலை, காஞ்சிபுரம் பச்சையப்பன் தெரு, நாராயண நாயக்கன் தெரு, வீரபத்திர ஆச்சாரி தெரு, சைபுல் முல்க் தெரு, தெற்கு கூவம் சாலை.

**63 (அ) வட்டம்:** புர்ரா தெரு, மாருல் தெரு, ஜான் முகமது தெரு, குலாப் மொய்தீன் தெரு, நைனியப்பா தெரு, சுப்பராயன் தெரு, கோபால்தாஸ் தெரு, வி.என்.தாஸ் ரோடு, உசேன் முல்க் தெரு, வீரன்புரம், அஸிஸ் மக்கான் தெரு, எம்.எஸ். மஹால்.

**114வது வட்டம்:** பிள்ளையார் கோவில் தெரு, குப்பு முத்து தெரு, எல்லிஸ் ரோடு, அய்யாவு தெரு, நைபூன் அலிகான் தெரு, காண்பாத் தெரு டவர்ஸ், திருவல்லிக்கேணி பிரதான சாலை, அபிபுல்லா தெரு, பக்கிரி சாகிப் தெரு, பைகிராப்ட் ரோடு.

**114 (அ) வட்டம்:** அருணாச்சலம் தெரு, மியான்ஷாகிப் தெரு, வெங்கடேசன் தெரு, ஓ.பி.எம். தெரு, கிருஷ்ணப்பா தெரு, லால்பேகம் தெர, பெரிய தெரு, பார்த்தசாரதி தெரு, அய்யா தெரு, ரங்கநாதன் தெரு, அக்பர் சாகிப் தெரு, சையோஜி தெரு, டி.எச்.ரோடு.

**115வது வட்டம்:** ஜெ.ஜெ.கான் ரோடு, நாயர் அய்யா பிள்ளை தெரு, முகமது உசேன் தெரு, பைக்கிராப்ட் ரோடு, மிர் பக்ஷி அலி தெரு, அய்யா பிள்ளை தெரு, பீட்டர்ஸ் ரோடு, சர்தார் ஜன் கார்மன், மசூதி தெரு, பீட்டர்ஸ் ரோடு, ஆர்.ஓ.பி. 5-வது தெரு, ஆர்.ஓ.பி. மெயின் தெரு.

**எஸ்.மதன் மோகன்,**
செயலாளர்,
சேப்பாக்கம் பகுதி தி.மு.க. 9-வது மண்டலக்குழுத் தலைவர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே. நகர் கிழக்கு பகுதி 40 வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெறும் போது பாட்டாளி மக்கள் கட்சியின் முன்னாள் ஊடகப் பிரிவு மாவட்ட செயலாளர் (ம) பாரத் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பில் இருந்த முக்கேஷ் மற்றும் பா.ம.க முன்னாள் பொறுப்பாளர் ரஞ்சிதன் இருவரும் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமையில் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைந்தனர். உடன் கழக மாணவர் அணி துணை செயலாளர் தமிழ் க. அமுதரசன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம் பி., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் இரா லட்சுமணன், கழக பேச்சாளர் அத்திப்பட்டு சாம்ராஜ், அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பி.சதீஷ்குமார், மருதுகணேஷ் மற்றும் கழகத் தோழர்கள் உடன் இருந்தனர்.